# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2166/50 - 2020 මාර්තු මස 14 වැනි සෙනසුරාදා - 2020.03.14

*2166/50 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 14 ஆந் திகதி சனிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

***(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66 அ(1)(அ) ஆம் பிரிவின் கீழ் கம்புறுபிட்டிய பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்***

கம்புறுபிட்டிய பிரதேச சபைக்குத் தெரிந்தெடுத்து அனுப்பப்பட்ட உறுப்பினர் ஒருவரின் பதவி, இறப்பெய்தியமை காரணமாக வெற்றிடமாகியிருக்கின்றதாதலாலும் ;

மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 66 அ (1)(அ) ஆம் பிரிவின் கீழ், கம்புறுபிட்டிய பிரதேச சபை இலக்கம் 2 - நாரங்தெனிய வட்டாரத்திற்கு தெரிவுசெய்யப்பட்ட லலித் அல்விஸ் சமரசிங்க என்பவர் அங்கம் வகிக்கின்ற ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 9 ஆம் பிரிவின் கீழ் தகைமையுடைய வேட்பாளரொருவராக, உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியைச் சேர்ந்தவருமான கம்புறுபிட்டிய பிரதேச சபை இலக்கம் 2 - நாரங்தெனிய வட்டாரத்தின் உறுப்பினர் தொடர்பாகத் தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளரினால் அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்காக ஹாலிஎல கமகே உபுல் பிரியந்த என்பவரைப் பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும் ;

*இப்போது, கம்புறுபிட்டிய பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலரான தானந்திரி விதானகே போஷிதா கௌமதீ ஆகிய நான், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 66 (1) (அ) ஆம் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு ஹாலிஎல கமகே உபுல் பிரியந்த என்பவர் கம்புறுபிட்டிய பிரதேச சபையின் இலக்கம் 2 – நாரங்தெனிய வட்டாரத்திற்கு உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.*

*டீ. டபிள்யூ. போஷிதா கௌமதீ,*
*தெரிவத்தாட்சி அலுவலர்,*
*கம்புறுபிட்டிய பிரதேச சபை.*

*மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,*
*மாத்தறை,*
*2020, மாச்சு 13.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.